3448

16 NOV 2017

Saidapet, Chennai - 600 015.

சுருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை– குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005 (மத்திய சட்டம் எண்.43, 2005)–ன் கீழ் மாவட்ட சமூக நல அலுவலகங்களில் பணிபுரிந்து வரும் பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சர்களின் தொகுப்பூதியத்தினை உயர்த்தி வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந.3) துறை,

அரசாணை (நிலை) எண்.77

நாள்.10.11.2017

ஹேவிளம்பி ஐப்பசி 24, திருவள்ளுவராண்டு 2048

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (2ப) எண்.55, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை நாள், 19.12.2006
2. அரசாணை (நிலை) எண்.13, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 13.02.2008
3. அரசாணை (நிலை) எண்.19, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 21.02.2011

மேலும் படிக்கப்பட்டது :–

4. சமூக நல இயக்குநரின் கடித ந.க.எண்.38285/நிர்1(3)/ 2015, நாள் 07.01.2016,16.11.2016 மற்றும் 08.06.2017

**********

ஆணை:-

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஏனையவற்றுடன், குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005-ன் (மத்திய சட்டம் எண்.43, 2005), பிரிவு 8-ன் கீழ் சட்டம் மற்றும் விதிகளை நடைமுறைப்படுத்தும் வகையில் தகுதியுள்ள மாவட்ட சமூக நல அலுவலர்களை தற்காலிகமாக பாதுகாப்பு அலுவலர்களாக நியமனம் செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், ஏனையவற்றுடன், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பிரதிமாதம் ரூ.15,000/– தொகுப்பூதிய அடிப்படையில் ஒரு பாதுகாப்பு அலுவலர் (Protection Officer) பணியிடமும், சென்னை மாவட்டத்திற்கு மட்டும் 2 பதவிகள் உட்பட 31 பணியிடங்கள் உருவாக்கிடுவதுடன் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பிரதிமாதம் ரூ.6,000/– தொகுப்பூதிய அடிப்படையில் கணினி அறிவுடன் கூடிய ஒரு இளநிலை உதவியாளர் / தட்டச்சர் (Junior Assistant-cum-Typist) என்று 31 பணியிடங்களும் உருவாக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாட்டில், அரியலூர் மற்றும் திருப்பூர் ஆகிய இரண்டு மாவட்டங்கள் புதியதாக உருவாக்கப்பட்டதையடுத்து, ஏனையவற்றுள், குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005–ன்படி (மத்திய சட்டம் எண்.43, 2005) அரியலூர் மற்றும் திருப்பூர் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கு மாதம் ரூ.15,000/- தொகுப்பூதியம் என்ற அடிப்படையில் ஒரு மாவட்டத்திற்கு ஒரு பாதுகாப்பு அலுவலர் பணியிடம் வீதம் இரண்டு பணியிடங்கள் உருவாக்கப்பட்டதுடன், மேற்குறிப்பிட்ட இரண்டு மாவட்டங்களுக்கும் மாதம் ரூ.6,000/- தொகுப்பூதியம் என்ற அடிப்படையில் கணினி அறிவுடன் கூடிய இளநிலை உதவியாளர் / தட்டச்சர் பணியிடம் (Junior Assistant cum Typist) ஒரு மாவட்டத்திற்கு ஒன்று வீதம் இரண்டு பணியிடங்கள் உருவாக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் சமூக நல இயக்குநர், குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், (மத்திய சட்டம் எண்.43, 2005) 2005–ன் கீழ் பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்/தட்டச்சர்களை 32 மாவட்ட சமூக நல அலுவலகங்களில், மாவட்டத்திற்கு ஒருவரென (சென்னையில் இரண்டு பாதுகாப்பு அலுவலர்கள்) ஒப்பந்த அடிப்படையில் தற்காலிக தொகுப்பூதிய பணியாளர்களாக பணியமர்த்தப்பட்டுள்ளனர் எனவும், பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள்/தட்டச்சர்களின் வயது வரம்பு 35 வயதிலிருந்து 48 வயதைக் கடந்து விட்ட நிலையிலும் 9 ஆண்டுகளாக பணி செய்து வரும் நிலையில் பணிவரன்முறை செய்யப்படாமலும், ஊதிய உயர்வு ஏதும் இன்றியும் தொகுப்பூதியமாக நிர்ணயிக்கப்பட்ட ரூ.15,000/– மற்றும் இளநிலை உதவியாளர்/தட்டச்சர்களுக்கு ரூ.6,000/–மும் மட்டுமே இன்றுவரை ஊதியமாக வழங்கப்பட்டு வருகின்றது எனவும் தெரிவித்துள்ளார். மேலும், மேற்குறிப்பிடப்பட்ட பணியாளர்கள் 40 வயது முதல் 48 வயது கடந்த நிலையில் வேறுபிற பணிவாய்ப்பு பெற்றிட இயலாத சூழ்நிலையில் உள்ளனர் எனவும், அவர்களின் வேலைவாய்ப்பு அட்டையையும் அசலாக ஒப்படைத்துள்ளதால் வேறு வேலைவாய்ப்புகளுக்கு செல்ல இயலாத நிலையில் உள்ளனர் எனவும், பாதுகாப்பு அலுவலர் பணியிட நியமனத்திற்கு பிறகு இதே துறையில் சமூக பாதுகாப்பு துறையில் நியமனம் செய்யப்பட்டுள்ள குழந்தை பாதுகாப்பு அலுவலர்கள் ரூ.21,000/- பெற்று வருகின்றனர் எனவும், மேற்படி பணியாளர்களின் ஊதியமே அவரவர் குடும்பங்களில், முக்கிய வருமானமாக உள்ளதாக சமூக நல இயக்குநர் அரசுக்குத் தெரிவித்துள்ளார். எனவே, பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சர்கள் பெற்றுவரும் ஊதியம் வளர்ந்து வரும் தங்களது குழந்தைகளுக்கான உணவு, உடை மற்றும் கல்வி செலவினங்களுக்கு பற்றாக்குறையாக உள்ளது எனவும், தற்காலிக பணி நியமனம் செய்யப்பட்ட ஆண்டான 2008ம் ஆண்டு முதல் இன்று வரை 9 ஆண்டுகளாக பணிவரன்முறை மற்றும் ஊதிய உயர்வு ஏதும் இல்லாமல் சுமார் 10 வருடங்களாக ஒரே நிலையில் பணியாற்றிவரும் இவர்களது பணி அவசியமான ஒன்றாக இருப்பதால் அவர்கள் ஏற்கனவே ரூ.15,000/- மற்றும் ரூ.6,000/-என தொகுப்பூதியமாக பெற்றுவரும் ஊதியத்தை முறையே, மாதம் ஒன்றுக்கு ரூ.30,000/– மற்றும் ரூ.12,000/– என உயர்த்தி ஆணை வழங்குமாறு சமூக நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

5. சமூக நல இயக்குநரின் கருத்துருவை கவனமாக பரிசீலித்த அரசு, அதனை ஏற்று, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005ன் (மத்திய சட்டம் எண்.43, 2005) கீழ் மாவட்ட சமூக நல அலுவலகங்களில் பணிபுரியும் பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள்/தட்டச்சர்கள் ஆகியவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மாதாந்திர தொகுப்பூதியம் முறையே ரூ.15,000/- மற்றும் ரூ.6,000/- என்பதனை இவ்வாணை

வெளியிடப்படும் நாள் முதல் முறையே ரூ.30,000/– மற்றும் ரூ.12,000/–ஆக உயர்த்தி வழங்கிட ஆணையிடுகிறது.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.53954/நிதி(சந)/2017, நாள்.07.11.2017ல் பெறப்பட்ட ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
சமூக நல இயக்குநர், சென்னை – 15.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–8.
மாநில கணக்காயர், சென்னை –18
மாநிலக் கணக்காயர் (தணிக்கை I & II), சென்னை – 18.
அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்கள்
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர் சென்னை – 9.
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், சென்னை – 9.
முதன்மைச் செயலாளர், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அவர்களின்
முதன்மை தனிச் செயலர், சென்னை – 9.
நிதி (சந/ வ.செ. பொ.I) துறை, சென்னை – 9.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.ந.2) துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ப. விஜயலட்சுமி
அரசு சார்புச் செயலாளர்

சமூக நல இயக்குநரகம்,
சைதாப்பேட்டை, சென்னை-15.

மே.மு.ந.க.எண்.38285/நிர்.(3)/15, நாள்: 16-11-2017.

அரசாணை சார்பு செய்யப்படுகிறது.

17/11/17
சமூக நல இயக்குநருக்காக

பெறுநர்:
1) அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்
2) அனைத்து மாவட்ட சமூக நல அலுவலர்கள்

நகல்:
1) சம்பள கணக்கு அலுவலர், சென்னை-8
2) அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்
3) இருப்பு கோப்பு / உதிரி.